போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வன்னியர் சமூகத்திற்கு உள் ஒதுக்கீடு என்கின்ற ஒரு நிலை வந்திருக்கிறதென்று சொன்னால். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

திரு. S.S. பாலாஜி: மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்கின்ற அந்த நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உள் ஒதுக்கீடு என்று சொல்லக்கூடிய Horizontal reservation என்பதைத் தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோரில் சிறுபான்மையினருக்கும், அதேபோன்று ஒடுக்கப்பட்டோரில் அருந்ததியர் சமூகத்திற்கும் ஏற்படுத்தித் தந்து, உரிய சட்டப் பாதுகாப்பையும் தரக்கூடிய வழிமுறைகளையும் அறிந்து, அதைச் செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, ஒட்டுமொத்தமாக 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இருப்பது வன்னியர் சமூகத்திற்கு நல்லதா அல்லது 10.5 சதவிகிதம் இருப்பது நல்லதா என்கின்ற ஒரு விவாதமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு காவல் அரணாக இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதிலே நல்ல முடிவெடுப்பார் என்கின்ற நம்பிக்கையோடு அவருடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

4. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் 11–4–2023 அன்று ஒன்றிய உள் துறை அமைச்சர் மகன் பெயரை குறிப்பிட்டது, நீக்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், நீங்கள் ஏதாவது பேசுகிறீர்களா?

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன கருத்துக்கு, இதற்கு* related *ஆக ஏதாவது பேசப் போகிறீர்களா?*

திரு. நயினார் நாகேந்திரன்: *ஒரு கருத்து. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. (குறுக்கீடு) நீங்கள் என்னிடம் ஒரு தபால் தந்திருக்கிறீர்கள். அது என்னிடம் பரிசீலனையில் இருக்கிறது. (குறுக்கீடு) அவர்தான் அதை நடத்தினார். அவர் அதைக் குறிப்பிட்டதில் தவறு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அது முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், சொல்லுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய உரையாடலிலே மத்திய உள் துறை அமைச்சர் அவர்களுடைய பெயரைச் சொல்லி* IPL Cricket*-க்கு* ticket *உள்ளதைப் பொறுத்தவரையில், அவர்களும், அவர்களுடைய மகனும் வைத்திருக்கிறார்கள் என்று சொன்னது அவைக் குறிப்பில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. நாம் எல்லோரையும் மாண்புமிகு உறுப்பினர் அல்லது திரு. என்ற அடைமொழி வைத்து எல்லோரும் சொல்கிறோம். ஆனால், அவர் பேசுகின்ற போது அமித்ஷா மகன் என்று இருக்கிறது. அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அதில் திரு. என்றுதான் இருக்கிறது.*

முற்பகல் 11–40

திரு. நயினார் நாகேந்திரன்: *நானும் அதைத் தவறாகச் சொல்லவில்லை; குறையாகவும், குற்றமாகவும் சொல்லவில்லை. அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டாம் என்பது எங்களுடைய கருத்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே என்ன தவறு இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) 'திரு.' என்று சொல்லித்தான் பேசியிருக்கிறார். நீங்கள் அவைக் குறிப்பை எடுத்துத் தெளிவாகப் பாருங்கள். அதில் எதுவும் விமர்சனம் செய்தோ அல்லது கேலி செய்தோ அல்லது கிண்டல் செய்தோ எந்த வார்த்தையும் கிடையாது. அவருடைய மகன் என்று மரியாதை கொடுத்துதான் பேசியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஏதாவது தவறு இருந்தால் சொல்லுங்கள்; நீங்கள் சொல்வதற்கு முன்பாக நானே அதை அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதற்குப் பரிந்துரை செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தவறு இருந்தால் சொல்லுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமே! (குறுக்கீடு)*

திரு. நயினார் நாகேந்திரன்: *நான் தவறாகவோ, குறையாகவோ சொல்லவில்லை. அது அவைக் குறிப்பில் இடம் பெற வேண்டாம் என்பதுதான் பாரதிய ஜனதா கட்சியினரின் கருத்து. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *அது என்ன தகாத வார்த்தையா? அவர் சொன்னது என்ன தகாத வார்த்தையா? (மேசையைத் தட்டும் ஒலி) தகாத வார்த்தையாக இருந்தால் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். அவர் பெயரை, பெயர் என்று சொன்னது தவறா? அதாவது, 'திரு.' என்று சொல்லித்தான் அழைத்திருக்கிறார். அதில் என்ன தவறு இருக்கிறது? தவறு இருந்தால் சொல்லுங்கள், அதை எடுப்பதற்கு நானே தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. (குறுக்கீடு) போதும். அவர் உள் துறை அமைச்சராக இருக்கிறார்; அதைத்தான் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) அவருடைய மகன் என்று சொல்வதில் ஒன்றும் தவறில்லை. (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள், நிறைய அலுவல்கள் இருக்கின்றன. (குறுக்கீடு) திரு. செ. ராஜேஷ் குமார், நான் உங்களுக்கு பின்னர் வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து. . . (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கே.பி. முனுசாமி, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

3. சிறப்புக் கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித உள் ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கான கால அவகாசம் நீட்டித்திருப்பது

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி.கே. மணி, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்காகத்தானே எல்லோரும் பேசுகிறார்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டுக் கொள்கையில். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை, திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. கே.பி. முனுசாமி அவர்கள் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசட்டும். (குறுக்கீடு)*

திரு. கே.பி. முனுசாமி: *நான் பேசி விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இட ஒதுக்கீட்டுக் கொள்கையில் திராவிட இயக்கங்கள் அவரவர் ஆட்சி இருக்கின்றபோது மிகப் பெரிய பங்களிப்பை அளித்திருக்கின்றன. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, உச்ச நீதிமன்றமே 50 விழுக்காட்டிற்கு அதிகமாக வரக்கூடாது என்று சொன்ன போதும், 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பங்கு. அதைப்போல, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் அவருடைய பங்கில் நீண்டகாலமாக, பாரம்பரியமாக பிற்படுத்தப்பட்ட,*